2025 – ஜீலை மாதம் 24– ஆம் தேதி வியாழக்கிழமை
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 178 / 2023*

*2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 24– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 2, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 2, கணேஷ் |
| தந்தையார் பெயர் | : | நாராயணமூர்த்தி |
| ஊர் | : | மதுரை |
| வட்டம் | : | மதுரை |
| மாவட்டம் | : | மதுரை |
| தொழில் | : | உதவி மேலாளர் |
| வயது | : | 44 |

**தேதி: 24.07.2025.**

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 2–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் உதவி மேலாளர் ஆவேன். நான் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.2 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்படும் பின் வரும் ஆவணத்தை எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

1).எங்கள் நிறுவனத்தில் 1–ம் எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு செய்யப்பட்டதற்கான காப்பீடு மற்றும் விதிகள் அடங்கிய சான்றிதழின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

விபத்து சமயத்தில் 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 3–ம் தரப்பினருக்கான காப்பீடுநடைமுறையில் இருந்து வந்தது என்றால் விதிகளுக்குட்பட்டு நடைமுறையில் இருந்து வந்தது. 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் தகுதிச்சான்று இல்லையென்று 1–ம் எதிர்மனுதாரருக்கு எங்கள் நிறுவனத்தில் இருந்து அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லையென்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு முறையான தகுதிச்சான்று நடைமுறையில் இருந்தது என்றும், எங்கள் நிறுவனம் சரியாக ஆய்வு செய்யாமல் மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று இல்லையென்று பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்குண்டான காப்பீட்டை பொருத்து மனுதாரர் 3–ம் தரப்பினர் என்றால் சரிதான். இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகின்றோம் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

ஒப்பம்/– கே. முரளிதரக்கண்ணன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
பெரம்பலூர்.